சென்னை – காஞ்சிபுரம் – செங்கல்பட்டு – திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க.வின் இளம் பேச்சாளர்களுக்காக, நேற்று, சென்னை– அன்பகத்தில் 'சமூக ஊடகப் பயிற்சி அமர்வு' ஒன்றை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார்கள். அந்த அமர்வில் தற்போதைய அரசியல் சூழலில், தி.மு.க.வின் பணிகளையும் பொதுச் சேவையையும் எவ்வாறு திறம்பட மேற்கொள்வது என்பது குறித்து விவாதித்தார்கள்.

தமிழ்நாட்டை மோசமான சூழ்நிலைக்கு கொண்டு செல்லும் த.வெ.க. அரசு!

குற்றங்களை மூடி மறைக்கும் வழியையே தேடுகின்றனர்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 17-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (16.06.2026) செய்தியாளர்களின் கேள்விகளுக்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பதிலளித்தார். அப்போது கூறுகையில், நாட்டில் நடைபெறும் குற்றங்களை மூடி மறைக்கும் அரசாக த.வெ.க. அரசு உள்ளது எனக் குற்றம் சாட்டினார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி கூறியதாவது:-

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகிறது என்று பொய்யான பிரச்சாரத்தை முன்னிறுத்தியே த.வெ.க. ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மிக முக்கியமாக, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி, அரசு எந்தக் கவலையும் அக்கறையும் இல்லாத அளவுக்குத் தான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எம்.எல்.ஏ.வின் மோசமான செயல்!

அதைவிட மோசமாக, அந்தக் குற்றத்தை எப்படி மூடி மறைப்பது என்பதற்கான வழிகளைத்தான் இன்று அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று, ஒரு குழந்தையின் பிரேதப் பரிசோதனை (ஆட்டோப்சி) நடைபெறும் இடத்திற்கே ஒரு எம்.எல்.ஏ. உள்ளே சென்று, அந்தக் குழந்தையின் பெற்றோருடன் பேரம் பேசும் அளவுக்கு மிக மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

எங்களுடைய மகளிரணியைச் சேர்ந்த சகோதரி ஒருவர் அந்த நிகழ்வை நேரில் பார்த்திருக்கிறார். எனவே, இப்படிப்பட்ட ஒரு மிக மோசமான சூழலில்தான் தமிழ்நாட்டை கொண்டுபோய் அவர்கள் தள்ளியிருக்கிறார்கள்.

சிங்கப்பெண் படைக்கு என்ன அதிகாரம்?

சிங்கப்பெண் அமைக்கப்பட்ட பிறகும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பது ஏன்? என்ற கேள்விக்கு, குற்றச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. 'சிங்கப்பெண்' படை என்று பெயர் மாற்றம் செய்து வழங்கியதைப் பற்றி கூட நாங்கள் பெரிதாகப் பேச விரும்பவில்லை. ஆனால், அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஒரு தொலைபேசி எண் கூடக் கிடையாது.

ஏதேனும் ஒரு குற்றச் சம்பவமோஅல்லதுபிரச்சினையோ ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக மகளிர் ரோந்து வாகனத்தைத் தொடர்புகொள்வதற்கான வழிவகை கூட இல்லை. இவ்வாறான சூழலில், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இப்படி ஒரு சூழலில், முதலமைச்சர் இதுவரைக்கும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட இதைப் பற்றி பேசுவத்திற்கு தயாராக இல்லை.

மக்கள் மீது அக்கறையற்ற அரசு!

அப்படியிருக்கும்போது, மக்கள் மீதும், பெண்கள் மீதும், குழந்தைகள் மீதும் இந்த அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் காவல்துறையைப் பற்றிக் கூட அவர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாக என்ற கேள்விக்கு, நிறைய சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே ஈடுபட்டு இருப்பதாகத் தெளிவாகத் தெரிகிறது. ஒழுக்கம் மற்றும் போதை பொருள் பற்றி பேசுகிறார். ஆட்சியாளர்கள் அவர்களுடைய கடமையிலிருந்து தவறுகிறார்கள். அதுமட்டுமில்லாமல், பல நேரங்களில் பெண்களுடைய உடை தான் அவங்களுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறுகிறது என்று அவரின் திரைப் படங்களில் பேசிவிட்டு தான் ஆட்சிக்கு வந்துள்ளார். பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

குற்றச்செயல்களில் ஆளுங்கட்சியினர்!

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "பல சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே தொடர்புடையவர்களாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது. தனி மனித ஒழுக்கம் மற்றும் போதைப்பொருள் குறித்து அவர்கள் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் தங்களுடைய அடிப்படைக் கடமைகளிலிருந்தே தவறி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண்களின் உடையால் தான் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகின்றன என்ற கருத்துகளை அவருடைய திரைப்படங்களில் பேசியவர்தான் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார். எனவே, பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

வளர்ந்து வரும் ஊடகத் துறையில் — தங்களுக்கென தனித்த அடையாளத்துடன்

திறமையான ஊடகவியலாளர்களாக உருவாக வேண்டும்!

இதழியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களை வாழ்த்தி– சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை,ஜூன்.17-

கழகத் தலைவர் அவர்கள், தமது 'திராவிட மாடல்' அரசில் உருவாக்கிய சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் பயின்று - இதழியல் முதுநிலைப் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற 60 மாணவர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நேற்று மாலை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாற்றினர்.

அவர்களோடு அளவளாவிய பின், அச்சந்திப்பு குறித்து வலைதளப் பதிவிட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "ஊடகத் துறையில் தங்களுக்கென தனித்த அடையாளத்துடன், திறமையான ஊடகவியலாளர்களாக உருவாக வேண்டும்" என வாழ்த்திப் பாராட்டியுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின், அந்த வலைதளப் பதிவு வருமாறு:

ஊடகத் துறையில் உண்மையையும் அறத்தையும் இலக்காகக் கொண்ட இளம் இதழாளர்களை உருவாக்கும் நோக்கில், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான #திராவிடமாடல் அரசில், சென்னை இதழியல் கல்வி நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 2025-2026 கல்வியாண்டில், இதழியல் முதுநிலைப் பட்டயப் படிப்பில் 60 மாணவர்கள் பயின்று தேர்ச்சி பெற்ற நிலையில், அவர்களில் சில மாணவர்கள் இன்றைய தினம் (அதாவது நேற்று) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

வளர்ந்துவரும் ஊடகத் துறையில் தங்களுக்கென தனித்த அடையாளத்துடன், திறமையான ஊடகவியலாளர்களாக உருவாக வேண்டுமென அவர்களை வாழ்த்திப் பாராட்டினோம்!

இவ்வாறு அப்பதிவில், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முனைவர் எல்.பிரபு தலைமை! டி.பாபு — வே. கருணாநிதி வரவேற்புரை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

மாணவர் அணி சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

தமிழன் பிரசன்னா — மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் — டி ஆர் பாலு எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜூன்.17

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணிசார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (17.06.2026 புதன்கிழமை) மாலை 06.00 மணி இடம் : ரங்கநாத முதலி தெரு, பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் க.பல்லாவரத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு தலைமையில் நடைபெறுகிறது.

கண்டோன்மெண்ட் நகர கழக செயலாளர் டி. பாபு - பம்மல் (தெ) பகுதி கழக செயலாளர், 1வது மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஷ்வரன், எஸ்.ஜெகதீப், தே.ஜெகன் தேவேந்திரன், வே.சங்கீதா, தாம்பரம் மாநகர மாணவரணி நிர்வாகிகள் எஸ்.கார்த்திக் ஆ.செந்தில்குமார், குட்டி (எ)தினேஷ், லோ. இலக்கியா, அ.ஜோஸ்பிரபு, எம்.இளவரசன் சி.பா. வினோத் குமார், இரா.முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமை கழக சொற்பொழிவாளர் - மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம், இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், படப்பை ஆ.மனோகரன், ஆதிமாறன், ஜெ.ராமகிருஷ்ணன்,இரா.பொன்னுராம், அ.தமிழ்மாறன், சாய் ஜெய்காந்த் பாரதி, ந.நவீன், டாக்டர் கிருத்திகாதேவி, .இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னார்ட், கோல்டு டி.பிரகாஷ், எஸ்.சதீஷ், தமு. ரஞ்சன், வி.ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பம்மல் வீ.தினேஷ், பி.கி.அ.சத்திய பிரபு, ஒன்றிய கழக செயலாளர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர் மன் பையனூர், எம்.சேகர், ந. கோபால், எஸ்.டி.கருணாநிதி, ஏ.வந்தேமாதரம், பி. சந்தானம்,ஜி.கே. விவேகானந்தன்(எ)ரவி, எம்.டி. லோகநாதன், E.மணி, கே. பி.ராஜன், பகுதி கழக செயலாளர்கள், என்.சந்திரன், பி.குணாளன், எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், ஆ.நடராஜன், ஆர்.சுரேஷ், நகர கழக செயலாளர்கள் வெ.விஸ்வநாதன், ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி எம்.கே.டி.கார்த்திக், த.வினோத்குமார், பேரூர் கழக செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ் ஆர்.சதீஷ்குமார், தாம்பரம் மாநகர நிர்வாகிகள் இரா. நரேஷ்கண்ணா, பொன். சதாசிவம், வ.விஜயரங்கன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் கண்டோன்மென்ட் நகர மாணவரணி அமைப்பாளர் எம்.பி. மகேஷ், பம்மல் (தெ) பகுதி மாணவரணி அமைப்பாளர் ஜி.ஸ்ரீநிகேதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இனி மருத்துவர் பரிந்துரைச் சீட்டு கட்டாயம்!

இருமல் மருந்து நேரடி விற்பனைக்கு ஒன்றிய அரசு தடை!

சென்னை,ஜூன்.17-

இருமல் மருந்துகள் உள்ளிட்ட அனைத்து சிரப்களையும் மருந்துக்கடைகளில் மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இருந்தால் மட்டுமே இனி வாங்க முடியும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இருமல் மருந்துகள் உள்ளிட்ட அனைத்து சிரப்களையும் மருந்துக்கடைகளில் மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இருந்தால் மட்டுமே இனி வாங்க முடியும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக மருந்துகள் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு, அவற்றின் நேரடிவிற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் அசுத்தமான இருமல் மருந்துகளால் குழந்தைகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து, மருந்துகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய நாடு முழுவதும் இந்தப் புதிய விதிமுறையை மத்திய அரசு உடனடியாக அமல்படுத்தியுள்ளது.

இதன்படி, பொதுமக்கள் இனி எந்தவொரு மருத்துவசிரப் வகைகளையும் மருத்துவரின் அதிகாரப்பூர்வ சீட்டு இல்லாமல் நேரடியாக மருந்துக்கடைகளில் விலைக்கு வாங்க முடியாது.

மேலும், வீட்டு உபயோக சாதாரண மருத்துவப் பொருட்களின் வரிசையில் இடம் பெற்றிருந்த 'சிரப்ஸ்' என்ற வார்த்தை அதிகாரப்பூர்வமாக நீக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இதுவரை எவ்வித கட்டுப்பாடும் இன்றி விற்கப்பட்டு வந்த திரவ மருந்துகள் அனைத்தும், தற்போது கடுமையான மருந்து ஒழுங்கு முறைப் பட்டியலின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து அனைத்து மருந்தகங்களிலும் இந்த விதிமுறையை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், மூ.ரஞ்சன், பொன்ராம், கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, கோ.ஜானகிராமன், வனஜா தயாளன், சத்திய பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – கழகப் பேச்சாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அருகில் குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.